# இரண்டு வார்த்தை

**எ**ங்கு ஒழுக்கம், பக்தி, சிரத்தை, நேர்த்தி முறை யான வாழ்க்கை இருக்கிறதோ, அங்கு லக்ஷ்மி கடாட்சம் நிலையாகக் குடிகொள்கிறது. மஹாலஷ்மியை வழி பட்டால் குபேர சம்பத்துக் கிடைக்கும். குபேரனாகவும் ஆகிவிடலாம். எனது தந்தையார் பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகள் ஸ்ரீ ஷோடச மஹாலக்ஷ்மி குபேர பூஜை செய்துதான் பலரது இல்லங்களிலும் தொழிற்சாலைகளிலும் ஐஸ்வர்ய தீபம் ஏற்றி வைத்தார். நானும் அவரோடு சேர்ந்து ஆயிரக்கணக்கில் இப் பூஜையைச் செய்துள்ளேன். நான் மந்திரம் சொல்ல, அவர் பூஜை செய்வார். இன்று இப்பூஜைகள் பயனாகப் பலர் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றும் இப்பூஜையை ஸ்ரீ யோகமாயா புவனேஸ்வரி பீடத்திலும் பலரது இல்லங்களிலும் தொடர்ந்து நான் செய்து வருகிறேன். குபேரபூஜை ஒரு வரப்பிரசாதம். தூய்மையானவர்களுக்கும், உண்மையானவர்களுக்கும் குபேரன் அருள்பாலித்துவிடுவான். குபேரனுடைய இல்லத்தில் கிடைக்கக்கூடிய செல்வங்கள் மற்றும் நீரில் கிடைக்கக் கூடிய செல்வங்களாகிய சங்கநிதி,



பத்மநிதியைத் தனது பக்தர்களுக்குக் கொடுத்துவிட்டு சந்தோஷமடைவான். குபேரனுடைய வரலாற்றுக் குறிப்புகள் மற்றும் குபேரனைப் பற்றிய முக்கியத் தகவல்கள் இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. இதை வாசிப்பவர்கள், இதை வெளியிட்டவர்கள் யாவரும் நீங்காத செல்வங்கள் நிறைந்து வாழவேண்டுமென பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகளின் திருவடிகளைச் சிந்தித்துக் கொள்கிறேன்.

ஸ்வாமி திருவடியில்
ஸ்வாமி பரத்வாஜ்